முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2019 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2019-07-20
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது (OTQs தவிர்ந்த). பரீட்சார்த்திகள் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

எட்டு (08) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.4*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** 2019 மார்ச் 31 இலான இறுதித் தொக்கானது ரூபா 3,000,000/- கிரயமான வழக்கிழந்த உருப்படிகளைக் கொண்டிருந்தது. இதனை விற்பனை விலையில் 20 % வீத விற்பனைத் தரகின் (பணிசை) மீது ரூபா 3,200,000/- க்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

2019 மார்ச் 31 இல், சொல்லப்பட்ட தொக்கின் நிகர தேறத்தக்க பெறுமதியாக (NRV) அமைவது:

(1) ரூபா 3,200,000/- (2) ரூபா 3,000,000/- (3) ரூபா 2,560,000/- (4) ரூபா 640,000/-

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றுள் LKAS-02 தொக்குகள் நியமத்தின்படி, தொக்குகளின் கொள்வனவுக் கிரயத்தின் கீழ் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) கொள்வனவு விலை (2) இறக்குமதித் தீர்வைகள்

(3) போக்குவரத்துக் கட்டணங்கள் (4) விற்பனைச் செலவுகள் (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் கூற்றுக்கள், 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 உடன் சம்பந்தப்பட்டவையாகும்:

**(a)** சகல பங்காளர்களும் மூலதனத்திற்குச் சம அளவில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

**(b)** பங்குடமை வியாபாரத்தின் முகாமையில் ஒவ்வொரு பங்காளரும் பங்குபற்றலாம்.

**(c)** பங்குடமைக்கு புதிய பங்காளர் ஒருவரைச் சேர்ப்பதற்கு ஏற்கனவேயுள்ள பங்காளர்களின் சம்மதம் தேவையில்லை.

மேலே கூறப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்று/ கூற்றுக்கள்:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.4** **வரையறுக்கப்பட்ட டெவ்மி (தனி) கம்பனியானது** 2017 ஏப்ரல் 01 இல் ரூபா 2,000,000/- கிரயத்தில் இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்தது. இதன் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் 5 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் ஈற்றுப் பெறுமதி ரூபா 200,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இயந்திரமானது நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

2019 மார்ச் 31 இல் முன்கொணரற் பெறுமதியாக இருக்கக்கூடியது:

(1) ரூபா 1,600,000/- (2) ரூபா 1,080,000/-

(3) ரூபா 1,440,000/- (4) ரூபா 1,280,000/- (02 புள்ளிகள்)

***1.5*** *தொடக்கம்* ***1.8*** *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.5** நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடொன்றினை ஏற்பிசைவு செய்வதற்குத் திருப்திப்படுத்த வேண்டிய தேர்வுநிபந்தனை (criteria) ஒன்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.6** **சமன்** என்பவர் **சமன் டிரேடர்ஸின்** தனி உரிமையாளராவார். சகல வியாபார விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 2018 ஏப்ரல் 01 இலான தொக்கு | ரூபா 250,000/- |
| ஆண்டிற்கான கொள்வனவுகள் | ரூபா 850,000/- |
| 2019 மார்ச் 31 இலான தொக்கு | ரூபா 375,000/- |
| ஆண்டிற்கான மொத்த இலாபம் | விற்பனையில் 20% |

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனையைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.7** **அமித்** மற்றும் **தமித்** ஆகியோர் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் பங்குடமை ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். **அமித், தமித்** மற்றும் **ரமித்** ஆகியோரிடையே முறையே 3 : 3 : 4 என்ற விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் **ரமித்** என்பவர் புதிய பங்காளர் ஒருவராக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

**அமித்** மற்றும் **தமித்தின்** இழப்பீட்டு விகிதம் (Sacrifying ratio) ஐக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.8** **வரையறுக்கப்பட்ட இன்சைட் (தனி) கம்பனியானது** பெறுமதிசேர் வரிக்காக (VAT) பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள், 2019 மார்ச் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட இன்சைட் (தனி) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டவையாகும் :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனை (VAT உள்ளடக்கப்படாத) | 367,000 |
| கடன் கொள்வனவுகள் (VAT உள்ளடக்கப்படாத) | 196,000 |
| காசுக் கொள்வனவுகள் (VAT உள்ளடங்கிய) | 3,450 |
| 2019 மார்ச் 01 இலான VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி | 1,220 |

VAT வீதம் 15% எனக் கொள்க.

2019 மார்ச் 31 இல் VAT சென்மதிக் கணக்கு மீதியினைக் (Payable balance) கணிக்குக. (04 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**வரையறுக்கப்பட்ட பைன் ரெக்கோர்ட் (தனி) கம்பனியின்** பேரேட்டிலுள்ள 2018 டிசெம்பர் 31 இலான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது தனிப்பட்ட (தனித்தனி) கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கு மீதிகளின் மொத்தத் தொகையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது:

| | **ரூபா** |
|---|---|
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான மீதி | 1,300,540 |
| தனிப்பட்ட கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கு மீதிகளின் மொத்தத் தொகை | 1,167,640 |
| **வித்தியாசம்** | **132,900** |

பின்னர் செவ்வைபார்த்தபோது பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன:

(1) மாதத்திற்காகப் பெறப்பட்ட மொத்தக் கழிவுப் பெறுமதியான ரூபா 112,300/- ஆனது கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்த போதிலும், தனிப்பட்ட பேரேட்டுக் கணக்குகளில் பதியப்படவில்லை.

(2) தனிப்பட்ட பேரேட்டுக் கணக்கு மீதிகளைப் பிரித்தெடுக்கும்போது ரூபா 43,500/- செலவு மீதியானது தவறுதலாக வரவு மீதியாகக் கருதப்பட்டுள்ளது.

(3) 2018 டிசெம்பர் மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகை ரூபா 200,000/- இனால் அதிகமாகக் கூட்டப்பட்டிருந்தது.

(4) கடன்கொடுத்தோர் ஒருவருக்குச் செலுத்தவேண்டிய ரூபா 12,700/- ஆனது, வருமதிப் பேரேட்டுக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்த அந்த வாடிக்கையாளரிடமிருந்தான வருமதித் தொகை ஒன்றுடன் எதிர்த்தீர்த்தல் (off-set) செய்யப்பட்டது. இப்பதிவானது தனிப்பட்ட பேரேட்டுக் கணக்குகளில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டுப்பாட்டுக் கணக்கில் இது தொடர்பாக எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) கடன்கொடுத்தோர் ஒருவருக்கான ரூபா 54,500/- காசுக் கொடுப்பனவானது கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் உரிய தனிப்பட்ட பேரேட்டுக் கணக்கில் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) திருத்தப்பட்ட (Revised) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) கடன்கொடுத்தோர் தனிப்பட்ட பேரேட்டு மீதிகளின் மொத்தத் தொகையுடனான திருத்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியின் கணக்கிணக்கம் (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**அசங்க, திசங்க, இசங்க** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 4 : 4 : 2 என்ற விகிதத்தில் பகிரும் பங்குடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவவற்றிற்கு ஏற்பாடு செய்துள்ளது:

- ஆரம்ப மூலதன மீதிகளுக்கு ஆண்டிற்கு 12 % வட்டி செலுத்துதல்
- **அசங்க** மற்றும் **திசங்க** ஆகியோர் மாதாந்தம் முறையே ரூபா 12,000/- மற்றும் ரூபா 18,000/- சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்.

2019 மார்ச் 31 இல் பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன.

*(ரூபா '000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **அசங்க** | | 3,200 |
| **திசங்க** | | 2,100 |
| **இசங்க** | | 900 |
| 2018 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **அசங்க** | | 60 |
| **திசங்க** | 40 | |
| **இசங்க** | | 30 |
| எடுப்பனவுகள்: | | |
| **அசங்க** | 150 | |
| **திசங்க** | 200 | |
| **இசங்க** | 150 | |

பங்குடமையின் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 1,596,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட உதேனி (தனி) கம்பனியானது** அதன் வியாபார நடவடிக்கைகளை 2019 ஏப்ரல் 01 இல் தொடங்கியது. அதே தினத்தில் கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. 2019 ஏப்ரல் 01 இல் கீழ்வரும் கிரயங்கள் கம்பனியால் ஏற்படுத்தப்பட்டன:

| | ரூபா |
|---|---|
| இயந்திரக் கொள்வனவுக் கிரயம் | 1,250,000 |
| இயந்திரப் போக்குவரத்துக் கிரயம் | 10,000 |
| இயந்திரப் பொருத்துதல் (Installation) கிரயம் | 8,500 |
| இயந்திரத்தைப் பரீட்சிப்பதற்கான மாதிரிப் பொருட்களின் கிரயம் | 10,000 |
| வியாபார நடவடிக்கைகளை விளம்பரப்படுத்தல் கிரயம் | 17,500 |

***நீங்கள் செய்யவேண்டியது:***

2019 ஏப்ரல் 01 இல் இயந்திர மூலதனவாக்கல் கிரயத்தை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட நிலேந்திரா (தனி) கம்பனியில்** புதிதாக நியமிக்கப்பட்ட கணக்கு உதவியாளரால் 2018 டிசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்று கீழ்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் வங்கிக் கூற்றுப்படி மீதி | 1,721,490 |
| **கழி:** கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்: | |
| காசோலை இல. 150162 | (435,000) |
| காசோலை இல. 150278 | (123,000) |
| வங்கிக் கூற்றில் காணப்படும் அடையாளம் காணப்படாத வரவு | (190,000) |
| **கூட்டு:** தேறாத காசோலை வைப்புகள் | |
| காசோலை இல. 506761 | 520,000 |
| **2018 டிசெம்பர் 31 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான (காசேடு) வங்கி மீதி** | **1,493,490** |

ஏவ்வாறாயினும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ள காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான வங்கி மீதியானது, காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள உண்மையான வங்கி மீதியிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

(1) சமர்ப்பிக்கப்படாத காசோலை இல. 150162 இன் சரியான தொகை ரூபா 453,000/- ஆக இருந்ததுடன், இது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(2) அடையாளம் காணப்படாத வரவானது வாடிக்கையாளர் ஒருவரால் வங்கிக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட நேரடி வைப்பு எனப் பின்னர் இனங்காணப்பட்டது. இது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.

(3) 2018 டிசெம்பர் மாதத்திற்கான ரூபா 6,570/- வங்கிக் கட்டணம், காசு கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) செம்மையாக்கங்களை மேற்கொள்வதற்கு முன்னர் 2018 டிசெம்பர் 31 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்படும் உண்மையான வங்கி மீதியினை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) 2018 டிசெம்பர் மாதத்திற்கான செம்மையாக்கம் செய்யப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **‘‘திலனதரு’’** விளையாட்டுக் கழகத்துடன் தொடர்புடையனவாகும்:

(1) ஓர் அங்கத்தவரிடமிருந்தான வருடாந்த அங்கத்துவச் சந்தா ரூபா 2,500/-. 2018 சனவரி 01 இல் நிலுவையாகக் காணப்பட்ட மற்றும் முற்கூட்டியே பெறப்பட்ட அங்கத்துவச் சந்தா முறையே ரூபா 15,000/- மற்றும் ரூபா 5,000/- ஆகும்.

(2) 2018 டிசெம்பர் 31 இல், 8 அங்கத்தவர்கள் நடப்பு ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாவைச் செலுத்தியிருக்கவில்லை என்பதுடன் இதில் 2 அங்கத்தவர்கள் முந்திய ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாவையும்கூடச் செலுத்தியிருக்கவில்லை. 4 அங்கத்தவர்கள் அடுத்த ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாவை முன்கூட்டியே செலுத்தியுள்ளனர்.

(3) 2018 டிசெம்பர் 31 இல், ஓர் அங்கத்தவரின் அங்கத்துவச் சந்தாவானது கடந்த 03 வருடங்களாகத் தொடர்ந்தும் நிலுவையாகவுள்ளது. கழகமானது இத்தொகையினை நடப்பு ஆண்டில் பதிவழிக்கத் தீர்மானித்துள்ளது.

(4) 2018 டிசெம்பர் 31 இல் பதிவுகளின்படியான கழகத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 49 மாத்திரமே ஆகும். (01 அங்கத்தவரை இந்த நடப்பு ஆண்டில் நீக்கியதன் பின்னர்)

***நீங்கள் செய்யவேண்டியது:***

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக் கணக்கினைத் **தயாரிக்குக.**

(05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

***றிஸ்கி எலக்ரிக்கல்ஸ்*** ஒரு தனியுடமை வியாபாரமாகும். வியாபாரத்தின் கணக்கு உதவியாளர் 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றைத் தயாரித்துள்ளதுடன் அதில் நிகர இலாபமாக ரூபா 1,783,000/- பெறப்பட்டிருந்தது:

(1) 2019 மார்ச் 31 இல் வியாபாரக் கணக்கேடுகளில் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு:

| | **வரவு (ரூபா)** | **செலவு (ரூபா)** |
|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் - கிரயத்தில் | 3,500,000 | |
| மோட்டார் வாகனம் - கிரயத்தில் | 2,900,000 | |
| திரள் தேய்மானம்: | | |
| கட்டடம் | | 875,000 |
| மோட்டார் வாகனம் | | 1,450,000 |
| தொக்குகள் – கிரயத்தில் | 1,575,000 | |
| வியாபார வருமதிகள் | 575,000 | |
| வங்கி மீதி | 63,500 | |
| வியாபார சென்மதிகள் | | 876,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 4,100,000 |
| உரிமையாளர் எடுப்பனவுகள் | 470,500 | |
| ஆண்டிற்கான நிகர இலாபம் | | 1,783,000 |
| | **9,084,000** | **9,084,000** |

(2) கணக்கேடுகளில் பதியப்படாத பின்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

- *ரூபா 75,000/- ஐ வியாபாரத்திற்குச் செலுத்தவேண்டியிருந்த கடன்பட்டோர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளார். இதனால், இந்த வருமதித் தொகையானது பெற முடியாததாக மாறியுள்ளது. மேலும் ஆண்டின் இறுதியில் மீதமுள்ள வியாபார வருமதிகள் மீதியின் 2% இல் ஐயுறவுக்கடன் ஏற்பாடொன்றைப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.*

- *வியாபாரத்தின் உரிமையாளரான* ***சேனரத்*** *விநியோகத் தேவைக்காக தனது ரூபா 1,400,000/- பெறுமதியான தனிப்பட்ட வான் (Van) ஒன்றை மேலதிக மூலதனமாக 2019 டிசெம்பர் 31 இல் மாற்றஞ்செய்யத் தீர்மானித்தார்.*

***நீங்கள் செய்யவேண்டியது:***

2019 மார்ச் 31 இல் ***றிஸ்கி எலக்ரிக்கல்ஸ்*** இன் நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 08

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **எக்கோ நடனக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தல் கணக்கு மற்றும் 2018 சனவரி 01 இல் காணப்பட்ட நிதிநிலைக் கூற்று என்பன கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| **கொள்ளல், கொடுத்தல் கணக்கு** | | | |
|---|---|---|---|
| 2018 சனவரி 01 இல் மீதி | 5 | இரவு போசன நடன நிகழ்வுச் செலவுகள் | 300 |
| இரவு போசன நடன டிக்கெட் விற்பனை | 525 | இரவு போசன நடன நிகழ்வுக்கான விளம்பரச் செலவுகள் | 45 |
| நடன வகுப்புக் கட்டணம் | 1,050 | நடன ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 600 |
| நன்கொடைகள் | 180 | மின்சாரம் மற்றும் நீர் | 648 |
| அங்கத்துவக் கட்டணம் | 525 | நிருவாகக் கட்டணம் - ஒருங்கிணைப்பாளர் | 220 |
| | | 2018 டிசெம்பர் 31 இல் மீதி | 472 |
| | **2,285** | | **2,285** |

**2018 சனவரி 01 இல்**

**நிதி நிலைக் கூற்று** *(ரூபா '000)*

| | |
|---|---|
| **சொத்துக்கள்:** | |
| கட்டடம் - முன்கொணரற் பெறுமதியில் (கிரயம் ரூபா 2,700,000/-) | 2,300 |
| வருமதியாகவுள்ள அங்கத்துவக் கட்டணம் | 50 |
| முற்கூட்டி செலுத்தப்பட்ட மின்சாரச் செலவுகள் | 12 |
| வங்கி மீதி | 5 |
| | **2,367** |
| **திரள் நிதியும் பரிப்புக்களும்:** | |
| திரள் நிதி | 2,367 |
| | **2,367** |

பின்வரும் மேலதிக தகவல்களும் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

(1) மாதாந்த நிருவாகக் கட்டணம் ரூபா 20,000/- ஆனது ஒருங்கிணைப்பாளருக்குச் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2018 டிசெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவானது 2018 டிசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனைத் தவிர வேறு எவ்வித முற்கொடுப்பனவுகளோ அல்லது செலுத்துமதிகளோ 2018 டிசெம்பர் 31 இல் காணப்படவில்லை.

(2) 2018 சனவரி 01 இலான சகல அங்கத்துவக் கட்டண வருமதிகளும் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்டன. 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய அங்கத்துவக் கட்டணமான ரூபா 65,000/- ஆனது 2018 டிசெம்பர் 31 இல் நிலுவையாகக் காணப்பட்டது.

(3) 2018 டிசெம்பர் 01 இல், கட்டடத்தின் ஒரு பகுதியானது ரூபா 15,000/- மாதாந்த வாடகை அடிப்படையில் புத்தகசாலை ஒன்றிற்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. ஆண்டிறுதியில் வாடகை வருமானம் பெறப்படவேண்டியுள்ளது.

(4) கட்டடமானது ஆண்டிற்கு 5 % இல் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படவேண்டியுள்ளது.

(5) நன்கொடைகள், ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **எக்கோ நடனக் கழகத்தின்** வருமான மற்றும் செலவினக் கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 09

**சுனில், வினில், ரணில்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2:1:1 எனும் விகிதத்தில் பகிரும் **சுவிர மோட்டர்ஸ்** பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்கள் ஆவர்.

(1) அவர்களது பங்குடமை உடன்படிக்கை கீழ்வரும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது:

- **சுனில்** ரூபா 30,000/- மாதச் சம்பளத்தைப் பெற உரித்துடையவர்.
- பங்காளர்கள் அவர்களின் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 10 % வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

(2) 2019 மார்ச் 31 இல் **சுவிர மோட்டர்ஸின்** பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூபா '000)** | **செலவு (ரூபா '000)** |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **சுனில்** | | 1,500 |
| **வினில்** | | 1,000 |
| **ரணில்** | | 500 |
| 2018 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **சுனில்** | 365 | |
| **வினில்** | | 288 |
| **ரணில்** | 350 | |
| பங்காளர் எடுப்பனவுகள்: | | |
| **வினில்** | 80 | |
| **ரணில்** | 60 | |

(3) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 874,000/-.

(4) 2019 மார்ச் 31 இல், **ரணில்** பங்குடமையிலிருந்து இளைப்பாறுவதற்குத் (Retire) தீர்மானித்தார். 2019 மார்ச் 31 இல் பங்குடமையின் நன்மதிப்பானது ரூபா 3,000,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. நன்மதிப்பானது தனியான நன்மதிப்புக் கணக்கினைப் பேணாது பங்காளர் மூலதனக் கணக்குகளின் ஊடாகச் சீராக்கப்பட வேண்டும்.

(5) **ரணிலின்** இளைப்பாறலின் பின்னர், **சுனில்** மற்றும் **வினில்** ஆகியோரிடையே இலாப, நட்டமானது முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிரப்படவுள்ளது.

(6) **ரணிலின்** இளைப்பாறலின் பின் அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய முழுத் தொகையையும் ஒரு கடன் கணக்கிற்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சுவிர மோட்டர்ஸ்** இற்காகக் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) பங்காளர் மூலதனக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(b) பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

**வரையறுக்கப்பட்ட டிசைன் மார்ட் (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 10,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 12,550 |
| தனிச்சங்கள் | | 10,000 |
| இயந்திரம் - கிரயத்தில் | 6,000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 4,000 | |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 2,000 | |
| 2018 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| இயந்திரம் | | 3,600 |
| மோட்டார் வாகனங்கள் | | 2,000 |
| அலுவலக உபகரணம் | | 1,000 |
| 2019 மார்ச் 31 இல் தொக்குகள் | 10,200 | |
| வியாபார வருமதிகள் | 17,150 | |
| 2019 மார்ச் 31 இல் ஐயுறவுக்கடன் ஏற்பாடு | | 430 |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 12,690 | |
| வியாபார சென்மதிகள் | | 4,400 |
| 2018 ஏப்ரல் 01 இல் வருமான வரி ஏற்பாடு | | 40 |
| சாதாரண பங்குகளுக்கான இடைக்காலப் பங்கிலாபம் | 4,000 | |
| விற்பனை | | 46,000 |
| விற்பனைக் கிரயம் | 28,200 | |
| நிருவாகச் செலவுகள் | 3,630 | |
| விநியோகச் செலவுகள் | 1,600 | |
| நிதிச் செலவுகள் | 500 | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 50 | |
| | **90,020** | **90,020** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| இயந்திரம் | : | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 5 ஆண்டுகள் |

(2) 2019 மார்ச் 31 இல் கீழ்வரும் ஊடுசெயல்கள் கணக்கேடுகளில் கூட்டிணைக்கப்பட (Incorporated) வேண்டும்:

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வாடகை | : | ரூபா 40,000/- |
| காப்புறுதி முற்கொடுப்பனவு | : | ரூபா 70,000/- |

(3) 2019 சனவரி 01 இல், ஒவ்வொன்றும் ரூபா 100 க்கு 100,000 எண்ணிக்கையான 15 % தனிச்சங்களை கம்பனி வழங்கியது. இதற்கான வட்டியானது காலாண்டின் அடிப்படையில் செலுத்தப்படுவதுடன் முதற் காலாண்டிற்கான வட்டியானது 2019 ஏப்ரல் 01 இல் செலுத்தப்பட வேண்டும்.

(4) 2018/19 வரிமதிப்பாண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 90,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(5) முன்னர் தொழில் புரிந்த ஊழியரொருவர், உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற இரசாயனம் ஒன்றினால் தனக்கு ஏற்பட்ட சுகநலன் இழப்பிற்காக இழப்பீடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். 2019 மார்ச் 31 இல் இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டிராதபோதிலும் கம்பனி ரூபா 500,000/- ஐ இழப்பீடாக அவ்வூழியருக்குச் செலுத்த வேண்டியேற்படும் என்பது வழக்கறிஞர்களின் கருத்தாக உள்ளது.

(6) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக 2019 மே 31 இல் அங்கீகரித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**வரையறுக்கப்பட்ட டிசைன் மார்ட் (தனி) கம்பனியின்** முகாமையின் பாவனைக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (11 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 ஆந் திகதியிலான நிதிநிலைக் கூற்று (14 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |